Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

# சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

## வாராந்த பாடசாலை

பாடம் :- குடியியல்

1ம் வாரம்

தரம் :- 07

தயாரித்தவர்:- E. நிரோஷனி (இ/ப/ இராசகலை தமிழ் வித்தியாலயம்)

**பாட இலக்கம் : 02**

**தலைப்பு : எமது சமூகம்**

**01. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1) சமூகத்தில் மிகவும் சிறிய அலகு

1. ஊர் 2. குடும்பம் 3. பிரதேச சபை 4. வைத்தியசாலை

2) கூட்டுக்குடும்பத்தின் சிறப்பம்சம் அல்லாதது

1. உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம்
2. இளைய தலைமுறையினருக்கு கலாசார விழுமியங்களை உணர்த்தும்
3. வெளிச் சமூகத்துடன் தொடர்புகள் காணப்படும்
4. பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படுவது குறைவு

3) வேட்டையுக மனிதன் ஏனையோருடன் கூட்டாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்தமைக்கான காரணம்

1. உணவை பெற்றுக்கொள்ளல் 2. கல்லாயுதம் செய்தல்

3. நீரை சேமித்தல் 4. அரசாட்சி செய்தல்

4) ஆளிடைத்தொடர்பு தொடங்கும் இடம்

1. தாய் தந்தையிடமிருந்து 2. உறவினர்களிடமிருந்து

3. ஆசிரியரிடமிருந்து 4. சகோதர சகோதரிகளிடமிருந்து

5) ஆசிரியர்களால் மாணவர்களுக்காக நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளில் ஒன்று

1. நற்பண்புகளை வளர்த்தல் 2. போசனையை பெற்றுக் கொடுத்தல்

3. கீழ்படிந்து நடத்தல் 4. உரிய வயதில் திருமணம் செய்து வைத்தல்

**02. சரி,பிழை இடுக.**

1) சமத்துவமாக கடமையாற்றுவதும், கூட்டாக வாழ விரும்புவதும் விலங்குகளின் இயல்பாகும். ( )

2) வேட்டையுக மனிதனது தேவைகள் மிகவும் குறைவாகும். ( )

3) மக்கள் சமூகம் சிறப்பாக இயங்குவதற்கு ஆளிடைத் தொடர்புகள் மிக அவசியமாகும். ( )

4) சமய நிறுவனங்கள் சமூக ஒழுக்கம் சீர்குலைவதற்கு ஏதுவாய் அமைகின்றன. ( )

5) மனித வளத்தை வழங்குவதில் பிரதான இடத்தை பெறுவது குடும்பமாகும். ( )

**03. கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1) நிகழ்காலத்தில் காணப்படும் குடும்பத்தின் வகைகள் 2 தருக.

2) "சமூகம்" என்றால் என்ன?

3) விவசாய யுக மனிதன் சமூகமாக வாழ்ந்தமைக்கு ஏதுவாக அமைந்த செயற்பாடுகள் 3 தருக.

4) சமூகத்தில் காணப்படும் ஆளிடைத் தொடர்புகள் 3 தருக.

5) பெற்றோர் பிள்ளைகளுக்கு ஆற்றவேண்டிய கடமைகள் 4 தருக.

6) பிள்ளைகள் பெற்றோருக்காக ஆற்றவேண்டிய கடமைகள் 3 தருக.

7) ஆசிரியர் - மாணவர் இடைத்தொடர்பு சிறப்பாக அமைவதனால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.

8) அயலவர்களுடன் பகிர்ந்துக்கொள்ள வேண்டிய உயர் மனித பண்புகள் எவை?

9) அயலவர்களுடனான தொடர்பில் குறைபாடு ஏற்படுவதனால் நிகழக்கூடிய தீமையொன்றினை குறிப்பிடுக.

10) சமூக தேவைகளை நிறைவேற்றும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் இரண்டினை குறிப்பிடுக.

**03. உமது பிரதேசத்தில் காணப்படுகின்ற பல்வேறு அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.**

| அமைப்பு மற்றும் நிறுவனம் | | சமூகத்திற்கு கிடைக்கும் சேவைகள் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |